# தி.மு.க. மகளிர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

9 - ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) கே. மணி 52, வள்ளியம்மன் நகர், திண்டல் அஞ்சல், ஈரோடு - 12. 2) ஏ. கோமதி 113, காரப்பாறை, திண்டல் அஞ்சல், ஈரோடு - 12. 3) எஸ். சாந்தி 76, அண்ணா வீதி, சூரம்பட்டி வலசு, ஈரோடு - 9. 4) த. கஸ்தூரி திலகம் 104, இந்திரா வீதி, அணைக்கட்டு ரோடு, சூரம்பட்டி வலசு, ஈரோடு மாவட்டம். 5) எஸ். பானுமதி 8, பாவனி வீதி, சூரம்பட்டி வலசு, ஈரோடு - 9.

### பெரியார் நகர் பகுதி

அமைப்பாளர் - ச. சாமியாத்தாள் 168, பழைய பூந்துறை ரோடு, ஈரோடு - 638001.

துணை அமைப்பாளர்கள் - 1) எல். லதா 21/27, பெரியண்ணா வீதி, கலைமகள் பள்ளி பின்புறம், ஈரோடு - 638001. 2) எம். செல்வி 30, நல்லப்பா வீதி, ஈரோடு - 638001. 3) ஆர். கீதா 7. சாந்தகருக்கு முதல் வீதி, ஈரோடு - 1. 4) பி. ரேஷ்மா 21, சின்னப்பா வீதி, கைக்கோளன் தோட்டம், ஈரோடு - 638001. 5) பி. லட்சுமியம்மாள் 27, என்.ஜி.ஜி.ஓ. காலனி, ஈரோடு - 638009.

### கொல்லம்பாளையம் பகுதி

அமைப்பாளர் - ர. வடிவாம்பாள் கட்டபொம்மன் வீதி, கொல்லம்பாளையம், ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. சசிரேகா 99/1, பாரதி நகர் 6வது வீதி, மூலப்பாளையம் , ஈரோடு - 2. 2) பி.நித்யா 35, இரணியன் வீதி, ரங்கம்பாளையம், ஈரோடு - 9.

3) சா. லதாமகேஷ்வரி 166/3, காந்திஜி வீதி, கொல்லம்பாளையம், ஈரோடு - 2. 4) பூ. தேவி 4, காந்திஜி வீதி, மோளக்கவுண்டன்பாளையம், ஈரோடு - 2. 5) ம.அமிர்தவள்ளி 106, திரு.வி.க. வீதி, கொல்லம்பாளையம், ஈரோடு - 2.

### கருங்கல்பாளையம் பகுதி

அமைப்பாளர் - என். லட்சுமி 31, ராஜகோபால் தோட்டம், கருங்கல்பாளையம், ஈரோடு மாவட்டம் - 638003.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். மாலதி 123, அரசிளங்கோ வீதி -4. கருங்கல்பாளையம். ஈரோடு - 638003. 2) வி. சீதாலட்சுமி 32, மோசிக்கீரனார் வீதி - 4, கருங்கல்பாளையம், ஈரோடு - 638003. 3) கே. விஜயலட்சுமி 33/89, ஐயனாரப்பன் கோயில் - 1, கருங்கல்பாளையம், ஈரோடு - 638003. 4) ஆர். காமினி கருங்கல்பாளையம், ஈரோடு மாவட்டம்.

குறிப்பு : 1. கொடுமுடி வடக்கு ஒன்றியம், 2. கொடுமுடி தெற்கு ஒன்றியம், 1. ஊஞ்சலூர் பேரூர், 2. சென்னசமுத்திரம் பேரூர் பின்னர் அறிவிக்கப்படும்.

## சென்னை மேற்கு மாவட்டம்

### அண்ணா நகர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - அம்மு கோவிந்த் எண். 11, 19வது குறுக்குத் தெரு, தா.பி. சத்திரம், செனாய் நகர், சென்னை - 600030.

துணை அமைப்பாளர்கள் - 1) சத்யா எண். 112, 4வது தெரு, சத்யா நகர், அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600102. 2) கீதா சிகாமணி எண். 3, பத்மா பிளாட்ஸ், சென்ட்ரல் தெரு, கீழ்பாக்கம் கார்டன், சென்னை - 600010. 3) வைஷ்ணவி எண். 40, பிரிவரி சாலை, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600102. 4) லட்சுமி எண். 119, பெரியகூடல், செனாய் நகர், சென்னை - 600030. 5) ரமணி எண். 6, அம்பேத்கர் நகர், வள்ளியம்மாள் முதல் தெரு, காமராஜர் நகர், கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. 6) எஸ். மாலதி எண். 32, 4வது தெரு, பொன்னுவேல் பிள்ளை தோட்டம், அமைந்தகரை, சென்னை - 600029. 7) பி. சத்யா எண். 45, ஏ.பிளாக், அம்பேத்கர் நகர், நியூ ஆவடி சாலை, ஐ.சி.எஃப், சென்னை - 600038. 8) ஏ. ஜானகி எண். 117, ராணி அண்ணா நகர், கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. 9) எச். மீனா எண். 4/7, முத்துசோலை தெரு, டெய்லர்ஸ் ரோடு, சென்னை - 600010.

### அண்ணாநகர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - ஜி. மலர்விழி, எண். 23/77, விநாயகபுரம் 2வது தெரு, அரும்பாக்கம், சென்னை - 600106.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். சாந்தி எண். 11/41, வீரபாண்டியன் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை - 600094. 2) டி. அமுதா எம்.எச். காலனி, முதல் மெயின் ரோடு, அமைந்தகரை, சென்னை - 600029. 3) டி. வீரம்மாள் வத்தலகுண்டு ஆறுமுகம் நகர் 4வது தெரு, அரும்பாக்கம், சென்னை - 600106. 4) யுவராணி எண். 45/3, வள்ளலார் தெரு, சூளைமேடு, சென்னை - 600094. 5) வி. ரேணுகாதேவி எண். 12/41, இந்திரா காந்தி 1வது தெரு, சூளைமேடு, சென்னை - 600094.

6) ஆர். கோதாவரி எண். 23, இந்திராணி தெரு, அய்யாவு காலனி, அமைந்தகரை, சென்னை - 600029. 7) எம். கலாவதி எண். 43/52, கக்கன் நகர், அமைந்தகரை, சென்னை - 600029. 8) ஆர். நித்யா எண். 9/65, விநாயகபுரம் 2வது தெரு, அரும்பாக்கம், சென்னை - 600106.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

அமைப்பாளர் - ஏ. ஆனந்தி எண். 117, சுதந்திரா நகர், ஆயிரம்விளக்கு, சென்னை - 600006.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. புனிதா எண். இ-5, நக்கீரர் நகர், தேனாம்பேட்டை, சென்னை - 600018. 2) கா. சங்கீதா எண். 27/64, புதுப்பேட்டை கார்டன் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 600014. 3) வி. ஜானகி எண். 1/24. காஞ்சி காலனி, தெற்கு போக் சாலை, தி. நகர், சென்னை - 600017. 4) எஸ். புஷ்பா (எ) மாலா எண். 50, க்யூ பிளாக், இராமகாமத்துபுரம், தி. நகர், சென்னை - 17. 5) எம். கீதா எண். சி/14, கிரியப்பா சாலை, தி. நகர், சென்னை - 600017. 6) எஸ். செல்வி எண். 2, நல்லான் தெரு, தேனாம்பேட்டை, சென்னை - 600018. 7) பி. ஹேமலதா எண். 33/38, மாடல்பள்ளி சாலை, ஆயிரம்விளக்கு, சென்னை - 600006. 8) பி. நாகலட்சுமி எண். 29, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006. 9) மேரி புஷ்பா எண். 8/16, டாக்டர் தாமஸ் சாலை, தி. நகர், சென்னை - 600017. 10) பி. பரிமளாதேவி எண். 110, திரு.வி.க. குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600018. 11) டி. மெர்சி எண். 182, சிங்கோவில், தி. நகர், சென்னை - 600017. 12) எம். ரேணுகா எண். 186, தர்மாபுரம் 6வது தெரு, தி. நகர், சென்னை - 600017.

### ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி

அமைப்பாளர் - ஜெயந்தி பக்கிரிசாமி எண். 3/443, ஜெயலட்சுமிபுரம் 1வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.

துணை அமைப்பாளர்கள் - 1) மேட்லின்மேரி எண். 43/35, மேற்கு நமச்சிவாயபுரம், சூளைமேடு, சென்னை - 600094. 2) எம். கஜலட்சுமி எண். 8/16, திருவள்ளுவர்புரம் 2வது தெரு, சூளைமேடு, சென்னை - 600094. 3) ராதாபாய் எண். 25/10, ஸ்ரீராமபுரம் முதல் தெரு, சூளைமேடு, சென்னை - 600094. 4) ராதாமலர்கொடி கதவு எண். 7, பிளாக் எண். இ-4, (புலியூர் ஹவுசிங்போர்டு), கோடம்பாக்கம், சென்னை - 600024. 5) அன்பரசி புகழ் எண். 20, டேங்க் பண்டு ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034. 6) மு. க. இலக்கியா எண். 52/26, குட்டி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034. 7) பால்மொழி எண். 47/24, டிரஸ்ட்புரம் 9வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024. 8) அமுதவள்ளி எண். 7/1, புஷ்பா நகர், நுங்கம்பாக்கம், சென்னை - 600034. 9) எப். வளர்மதி எண். 33/34, பொன்னுசாமி வாத்தியார் தெரு, வரதராஜபேட்டை, சூளைமேடு, சென்னை - 600094.

### சேப்பாக்கம் பகுதி

அமைப்பாளர் - சுமதி மீனாட்சிசுந்தரம் எண். 40/47, தெற்கு கூவம் சாலை, புதுப்பேட்டை, சென்னை - 600002.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். வேளாங்கண்ணி எண். 1/இ, மேற்கு கூவம் ஆறு சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600002. 2) எஸ். தேவகாந்தி எண். 83, காக்ஸ் காலனி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600002. 3) பா. லஷ்மி 37, எல்.ஜி.என். சாலை, பார்டர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600002. 4) எஸ். மல்லிகா எண். 2/16, சுப்பிரமணி தெரு, சேப்பாக்கம், சென்னை - 600005. 5) சரஸ்வதி எண். 4/42, நாயர் வரதப்பிள்ளை தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600014.

### திருவல்லிக்கேணி பகுதி

அமைப்பாளர் - வ. தேசராணி எண். 56/25. நடுக்குப்பம் 3வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

துணை அமைப்பாளர்கள் - 1) லோ. கலைவாணி எண். 7, டாக்டர் பெசன்ட் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. 2) சு. பூங்கோதை எண். 6/12, வெங்கடேசபுரம் 4வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. 3) ஆர். லட்சுமி எண். 4/9, ஆறுமுக வைத்தியர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. 4) ஜா. ஃபிரிதாபேகம் யானை குளம், 5வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. 5) ரா. கற்பகவள்ளி எண். 25, காட்டு கோயில் தோட்டம், 3வது தெரு, மயிலாப்பூர், சென்னை - 600004. 6) சி. மீனாட்சி எண். 24, காட்டுக்கோயில் தோட்டம், மயிலாப்பூர், சென்னை - 600004. 7) எம். தேன்மொழி எண். 3/9, அண்ணா தெரு, அம்பேத்கார் நகர், இராயப்பேட்டை, சென்னை - 600014. 8) என். நந்தினி எண். 54, ராம் நகர், 8வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

### வாலாசாபாத் தெற்கு ஒன்றியம்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வாலாசாபாத் தெற்கு ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட அ. கௌரி அன்பழகன் மறைவெய்திய காரணத்தால், **பவித்ரா (எ) ஜெய்சிவஸ்ரீ** (132, மெயின் ரோடு, ஏகனாம்பேட்டை, வாலாசாபாத் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம்.) அவர்கள் **வாலாசாபாத் தெற்கு ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஒன்றிய அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17-05-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

## கோவை குறிச்சி 'சிட்கோ' தொழிற்பேட்டையில்

# தங்க நகைப் பூங்கா அமைப்பது குறித்து ஆலோசனை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

கோவை, மே 21-

கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வர்த்தக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (19.05.2025) குறு சிறு மற்றும் நாடுத்தரத் தொழி நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தங்க நகை பூங்கா அமைப்பது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை கூடுதல் தலைமை செயலாளர் மரு.அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண் இயக்குநர் / அரசு முதன்மை செயலாளர் ஏ.கார்த்திக் , மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் , தொழில்துறை ஆணையர் எல்.நிர்மல் ராஜ், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன பொது மேலாளர் எஸ்.தனலிங்கம் மற்றும் தங்க நகை தயாரிப்பாளர் சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின்வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

உலக அளவில் தங்க நகை உற்பத்தியில் முக்கிய மையமாகவும், தொழில் நகரமாகவும், விளங்கும் கோயம்புத்தூருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் சிட்கோ குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.126 கோடி மதிப்பில் தங்க நகை பூங்கா அமைக்கப்படும் என அறிவித்தார்கள். MSME துறையின் மூலம் தங்க நகை பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொண்டு தற்போது முழு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 2.46 ஏக்கர் பரப்பளவில், 8 லட்சத்து 57 ஆயிரம் சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட உள்ளது.

இதில், தங்க நகைப் பட்டறைகள், தங்க நகை உற்பத்திக்கான பொது வசதி மையம், 3D பிரிண்டிங் மற்றும் லேசர் கட்டிங் வசதிகள், ஹால்மார் தரப் பரிசோதனைக் கூடம். பாதுக்காப்பு பெட்டகம், கண்காட்சிக் கூடம், கூட்ட அரங்கம், பயிற்சி மையம், அதிநவீன கண்காணிப்பு வசதிகள், வாகனநிறுத்துமிடம் என பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் இந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் கோயம்புத்தூரில் உள்ள 18 க்கும் மேற்பட்ட தங்க நகை உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் கலந்துக் கொண்டுள்ளார்கள். தற்போது, இந்த திட்டம் குறித்து இக்கூட்டத்தில் விளக்கப்பட்டது. அரசு மிக கவனத்துடன் திட்டத்தை தயாரித்து இருந்தாலும், உங்களுக்கு தேவையான வசதிகள் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் உங்களுடைய ஆலோசனைகளை வழங்கலாம். இந்த கூட்டத்தில் தங்க நகை உற்பத்தியாளர்கள், சங்க நிர்வாகிகளின் சார்பில் வழங்கப்படும் கோரிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தியா விலேயே மிகச்சிறந்த தங்க நகை பூங்காவாக இந்த பூங்கா அமையவுள்ளது. என கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தான். அந்நிறுவனங்களை பாதுகாக்கவும், வளர்ப்பதற்காகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கள்ளப்பாளையம், மோப்பிரிப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் கொடிசியா தனியார் தொழிற்பேட்டை ரூ.44. 32 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.22.20 கோடி திட்ட மதிப்பீட்டில் 1.49 ஏக்கர் பரப்பளவில் 618 தொழிலாளர்கள் தங்கும் வகையில் தொழிலாளர் தங்கும் விடுதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மார்ச் மாதம் திறந்து வைப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.8.80 கோடி மதிப்பில் பொள்ளாச்சி கயிறு குழுமம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணி ஜீலை மாதம் முடிக்கப்படும். சொலவம் பாளையத்தில் ரூ.18.06 கோடி மதிப்பீட்டில் கொசிமா தனியார் தொழிற்பேட்டை பணிகள் நடைபெற்று வருகிறது. 2 மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்படும். கிட்டாம்பாளையத்தில் ரூ.24. 61 கோடி மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை இறுதி கட்டப் பணி ஜீன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.14.85 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.7.94 கோடி மானியத்துடன் மின்வாகன மோட்டார் பரிசோதனை மையம் அமைக்கும் பணி தொடங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, நீட்ஸ் திட்டத்தின் கீழ் ரூ.43.27 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.49 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.எஸ்.எம். இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தையும், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் ரூ.66 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.18.65 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.பாலோ கண்ட்ரோல் நிறுவனத்தையும், ரூ. 4.55 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.1.18 கோடி மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள சுகாதார சானிட்ரி நாப்கின் உற்பத்தி செய்யும் ஷாரஸ் வென்ச்சர் நிறுவனத்தையும், ரூ.48.60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.11.45 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் ஏ.பி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தையும், பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திடடத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தொழில் வளர் மையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தொடங்கி வைத்து நேரில் பார்வையிட்டார்.

முன்னதாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின் வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.

2030 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை தமிழ்நாடு அடைய, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 செப்டம்பரில் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க 100 கோடி ரூபாய் சிறப்பு நிதி உருவாக்கப்படும். தொழிற்சாலைகள், தொழில் கூட்டமைப்பினர் பங்களிப்புடன், திறன்சார்ந்த மையங்கள், பரிசோதனை மையங்கள். ஏற்றுமதி கிடங்குகள், உள்நாட்டுக் கொள்கலன் கிடங்குகள் போன்ற கட்டமைப்புகளை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இதற்கிணங்க, கோயம்புத்தூரில் உள்ள சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் சமர்ப்பித்த மின் வாகன (EV) மோட்டார் சோதனைக்கான பொது வசதி மையத்தை (Common Facility Centre CFC) அமைப்பதற்கான திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்த மையம், 369/188,189, பொள்ளாச்சி சாலை, குறிச்சி SIDCO தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் 641 021 என்ற முகவரியில் அமைக்கப்பட உள்ளது. திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 9.97 கோடி ஆகும். இந்த மொத்த மதிப்பீட்டில் ரூ.8.97 கோடி ஏற்றுமதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது. மேலும் மீதமுள்ள ரூ.1 கோடி, சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் பங்களிக்கவுள்ளது. இந்த மையத்திற்காக கொள்முதல் செய்யப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்திற்கும் FaMeTN நிறுவனமே உரிமையாளராக இருக்கும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் 23.09.2024 அன்று SITARC EV FOUNDATION என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமை (Special Purpose Vehicle) உருவாக்கியுள்ளது. திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்துவதற்கும் கண்காணிக்கப்படுவதற்கும் FaMe TN நிறுவனத்திற்கும் சிட்டார்க் (SITarc) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு நோக்கு முகமை (SPV), இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளியினை விரைவில் வெளியிடவுள்ளது. அனைத்து பணிகளும் 12 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு இச்சோதனை மையம் செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. நெடுஞ்செழியன்
### மே 21 (2001)



சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.

"கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**